**செய்தி வெளியீடு எண் : 849** **நாள் : 06.05.2023**

**தமிழ்நாடு அரசின் இரண்டாண்டு சாதனைகளை விளக்கும் புகைப்படக் கண்காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு அமைந்து இரண்டாண்டுகள் நிறைவுபெற்றதை முன்னிட்டு, சென்னை, கலைவாணர் அரங்கில் இன்று (06.05.2023) 1 இலட்சம் பயனாளிகளுக்கு ஓய்வூதிய பயன்கள் வழங்குதல் மற்றும் புதுமைப்பெண், நான் முதல்வன் திட்டங்களின் கீழ் ஆணைகள் வழங்குதல் விழா சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவை முன்னிட்டு, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், அரசின் சாதனைகளை பொதுமக்களுக்கு விளக்கிடும் வகையில் புகைப்படக் கண்காட்சி அமைக்கப்பட்டது. இக்கண்காட்சியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

இக்கண்காட்சியில்
சோதனையிலும் சாதனை,
மகளிர் முன்னேற்றமே, நாட்டின் முன்னேற்றம்,
மக்கள் நலன் பேணும் மகத்தான அரசு,
கல்வி மேம்பாடு – தந்தையுமான முதல்வர்
களத்தில் முதல்வர்,
வருங்கால தமிழகம் வளமான தமிழகம்,
இனிமையான சில தருணங்கள்
எனும் பல்வேறு தலைப்புகளில் புகைப்படக் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது பொதுமக்களிடையே வரவேற்பை பெற்றது.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பார்வையிட்டனர்.

இக் கண்காட்சி தொடர்ந்து, 14.05.2023 வரை நடைபெறும், காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை பொதுமக்கள் இக்கண்காட்சியினைப் பார்வையிடலாம். எனவே, பொதுமக்கள் இப்புகைப்படக் கண்காட்சியைப் பார்வையிட்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :
tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in